TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075242

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம்: சேலம் PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2022 FIR No. மு.த.அ. எண்: 7/AC/2022 Date நாள்: 8.5.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல்: Date to நாள் வரை: 5.5.2022 at 17.30 hrs 6.5.2022 at 18.45 hrs
Time Period நேர அளவு Time from நேரம் முதல் Time to நேரம் வரை:
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 8.5.2022 Time நேரம்: 18.30 hrs
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்:

4. Type of Information Written/ Oral தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 55 கி.மீ கிழக்கு
Beat Number முறைக் காவல் எண் (b) Address முகவரி: உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத் துறை ஆத்தூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District: மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: S. சுந்தர்ராஜ் (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: சேங்கவுண்டர்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 60 (d) Nationality நாட்டினம்: இந்தியன் (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் (g) Address முகவரி: க.எண். 35/36 மந்தை தெரு வீரகனூர் அஞ்சல், தலைவாசல் தாலுக்கா, சேலம் (மா)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / சந்தேகப்படுகின்ற / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தி. சந்திரசேகரன், உதவி கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத் துறை ஆத்தூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை

GCP-243-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. S— 8/05/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 9/05/2022
Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.05.2022/09.05 hrs.

Name: பெயர் S. Murugan
Rank: நிலை Inspr. of Police V&AC, Salem

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>சேலம் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.</u>

இன்று 08.05.2022ம் தேதி இரவு 18.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம் வீரகனூர் தெற்குமேட்டினை சேர்ந்த சுந்தரராஜ் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த, கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் S.சுந்தரராஜ், த/பெ சோமுகவுண்டர், 35/36, தெற்குமேடு, வீரகனூர் அஞ்சல், தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் லஞ்சஒழிப்பு துறை, சேலம். ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து விவசாயம் மற்றும் நெடுஞ்சாலை துறையில் ஒப்பந்ததாரராக மாநில அளவில் பணிகள் செய்துவருகிறேன். எனது பதிவு எண் 13/2012-13 ஆகும். கடந்த 29.11.2021 ஆம் தேதியன்று சிறப்பு பழுதுபார்த்தல் பணிக்கு நடைபெற்ற டெண்டரில் ஆத்தூர் உட்கோட்டத்திற்குட்பட்ட சாலைகள் நன்றாக உள்ளதாகவும், வேறு பணிகளை செய்யலாம் என்று சேலம் நெடுஞ்சாலை வட்ட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு பொறியாளரிடம் மின் அஞ்சல் மூலம் தெரிவித்தேன். ஆனால் மேற்படி பணிகளுக்கு 27.12.2021 ஆம் தேதியன்று டெண்டர் நடைபெற்றது. நான் ஆன்லைன் டெண்டரில் கலந்துகொண்டு அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்து சான்று ஆவணங்கள் மற்றும் முன்வைப்புத்தொகைக்கான ஆவணங்களை அவரிடம் வழங்க அன்று மதியம் சுமார் 2 மணியளவில் சென்றபோது அவர் அதை வாங்க மறுத்ததால் நான் அதனை விரைவு தபால் மூலமாக அனுப்பினேன். அவர் அதை ஏற்க மறுத்து எனது டெண்டரை நிராகரித்ததால் நான் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்று மறுபடியும் டெண்டர் நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்பிறகு 11.3.2022 அன்று நடைபெற்ற மறுடெண்டரில் நான் கலந்துகொண்டு மறுபடியும் எனது ஆவணங்கள் மற்றும் முன்வைப்புத் தொகையை பதிவேற்றம் செய்து முன்வைப்புத் தொகையினை முன்கூட்டியே விரைவுத்தபாலில் அனுப்பினேன். ஆனால் அவர் முன்வைப்புத் தொகை வைப்புத்தொகை வைக்கவில்லை என்று டெண்டரை நிராகரித்துவிட்டார். இதற்கிடையில் சேலம் வட்ட நெடுஞ்சாலைதுறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவின் மூலம் திடாவூர் முதல் தம்மம்பட்டி வரையில் 6.6 கிலோ மீட்டர் சாலையை ரூபாய் 6,93,70,000/-

மதிப்பில் அகலப்படுத்தி இரு வழி சாலையாக அமைக்கவும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் இதனுடன் சேர்த்து மொத்தம் 9 பணிகளுக்கு ஆன்லைன் டெண்டர் வழங்க 31.12.2021ம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டது. விண்ணப்பிக்கும்போது ரூபாய் 3.58.000/-க்கு EMD செலுத்தவும், 11.02.2022ம் தேதி 15.00 மணிக்குள் விண்ணப்பிக்கவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் முறையாக EMD செலுத்தி ஆன்லைனில் 06.02.2022ம் தேதியில் மேற்படி பணிக்கு டெண்டர் கோரினேன். என்னுடன் சேர்த்து மொத்தம் 3 போட்டியாளர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பித்திருந்தனர். 28.02.2022ம் தேதி அன்று திரு.சுரேஷ் கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் தலைமையிலான டெண்டர் கமிட்டி முன்னிலையில் டெண்டர் திறக்கப்பட்டது. மேற்படி 3 போட்டியாளர்களில் நான் குறைந்த விலை குறிப்பிட்டிருந்ததால், மேற்படி பணிஒப்பந்தத்தை எனக்கு வழங்க முடிவு செய்யப்பட்டு, 28.04.2022ம் தேதியில் அந்த வேலை எனக்கு ஒதுக்கப்பட்டது. அதில் ரூபாய் 10.29.000/-க்கு பிணை வைப்புத்தொகை கிசான்விகாஸ் பத்திரம் அல்லது தேசிய சேமிப்பு பத்திரம் அல்லது அஞ்சலக வைப்புத்தொகை வடிவில் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சேலம் என்ற பெயரில் ஈடுசெய்து செலுத்தவேண்டும் எனவும், இதர ஆவணங்களுடன் இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் கண்காணிப்பு பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சேலம் அலுவலகத்திற்கு வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்கடிதம் 30.04.2022ம் தேதியில் எனக்கு கிடைத்தது. அந்த கடிதத்தின் அடிப்படையில், 05.05.2022ம் தேதி மதியம் சுமார் 3.45 மணிக்கு சேலம் வந்து நெடுஞ்சாலைதுறை கண்காணிப்பு பொறியாளர் திரு.சுரேஷ் அவர்களை சந்தித்தேன். அப்போது, அவர், நெடுஞ்சாலைதுறையின் ஆத்தூர் உதவி கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்களை சந்திக்குமாறும் அவர் சொல்லும்விதம் நடந்துகொள்ளுமாறும் சொன்னார். நான் அப்போது, ஏற்கனவே நடந்து முடிந்த 4 பணிகளுக்கான டெண்டர் சம்மந்தப்பட்ட டேவணித்தொகை ஆவணங்களை திருப்பி தருமாறு கண்காணிப்பு பொறியாளர் திரு.சுரேஷ் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர், நான் ஏற்கனவே நேரில் கொடுத்த ஆவணங்களை மட்டும் கொடுத்துவிட்டு, நான் தபாலில் அனுப்பிய ஆவணங்களை எனக்கு தரவில்லை. நான் உடனே புறப்பட்டு, ஆத்தூர் சென்று நெடுஞ்சாலை துறையின் உதவி கோட்டப்பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்களை அவரது அலுவலகத்தில்

மாலை சுமார் 5.30 மணிக்கு சந்தித்து, கண்காணிப்பு பொறியாளரை சந்தித்த விவரம் குறித்து சொன்னேன். அதற்கு, அவர், அந்த வேலைமுடித்தபின் எவ்வித பிரச்சனையும் இல்லாமல் பணம் சேங்ஷன் செய்வதற்காக 78 இலட்சத்து 53ஆயிரம் கண்காணிப்பு பொறியாளருக்கு கமிஷனாக தரவேண்டும் என்று சொன்னார். தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, மொத்தமாக அவ்வளவு பணம் தரமுடியாது என்று நான் சொன்னேன். பிறகு, அந்த வேலைக்கு அக்ரிமெண்ட் போடுவது பற்றி கேட்டேன். அக்ரிமெண்ட்டை ரெடி பண்ணிகொண்டு வருமாறும், தான் அதில் கண்காணிப்பு பொறியாளரிடம் கையொப்பம் பெற்று தருவதாகவும் சொன்னார். நான் மறுநாள் வருவதாக சொன்னேன். அதற்கு அவர், அதுபற்றி மறுநாள் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னதால் நான் வீட்டிற்கு போய்விட்டேன். பின்னர், மறுநாள் 06.05.2022ம் தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 11.30 மணிக்கு ஆத்தூரிலுள்ள நெடுஞ்சாலைதுறை உதவி கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, உதவி கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்களை சந்திக்க அவரது அலுவலகத்திற்கு போனேன். அப்போது, அவர் அலுவலகத்தில் இல்லை. விசாரித்தபோது, மாலை 6.00 மணிக்கு மேல்தான் வருவார் என்று சொன்னார்கள். நான் வீட்டிற்கு போய்விட்டேன். பிறகு, அன்று மாலை சுமார் 6.45 மணிக்கு ஆத்தூரிலுள்ள நெடுஞ்சாலைதுறை உதவி கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, உதவி கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகரன் அவர்களை சந்தித்து, அக்ரிமெண்ட் போடுவதற்கான வைப்புதொகையை ரெடிபண்ணிவிட்டதாக சொல்லி மேற்படி பணிக்கு அக்ரிமெண்ட் போடுவது பற்றி கேட்டேன். அதற்கு அவர், அந்த வேலைக்கு கண்காணிப்பு பொறியாளரிடம் அக்ரிமெண்ட் போடவேண்டுமென்றால் அந்த வேலை மதிப்பில் ½ சதவிகிதம் தொகையை அதாவது ரூபாய் 3.5 இலட்சத்தை கண்காணிப்பு பொறியாளருக்கு கமிஷனாக தரவேண்டும், அந்த பணத்தை தன்னிடம் கொடுத்தால் தான் அதை அவரிடம் கொடுத்துவிடுவதாகவும், என்னுடைய அக்ரிமெண்ட்டில் கண்காணிப்பு பொறியாளரிடம் கையொப்பம் பெற்றுத்தருவதாகவும் சொன்னார். அவ்வாறு அவருக்கு பணம் ரூபாய் 3.5 இலட்சம் தரவில்லையென்றால், கண்காணிப்பு பொறியாளர் அக்ரிமெண்ட்டில் கையொப்பம் போடமாட்டார் என்று சொன்னார். எனவே, எனக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள வேலைக்காக அக்ரிமெண்ட் போடுவதற்கு உதவி கோட்ட பொறியாளர் மூலமாக நான் கண்காணிப்பு பொறியாளருக்கு பணம்

*தரவில்லையென்றால், நான் அந்த வேலையை முறையாக செய்துமுடித்து அதற்கான தொகையை பெறுவதில் தடை ஏற்படும் நிலை உள்ளது. ஆனால், உதவி கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகரன் மூலம் கண்காணிப்பு பொறியாளர் சுரேஷ் அவர்களுக்கு பணம் கொடுத்து அக்ரிமெண்ட் போட எனக்கு விருப்பமில்லை. உதவி கோட்ட பொறியாளர் சந்திரசேகரன் அவர்கள் கண்காணிப்பு பொறியாளர் சுரேஷ் அவர்களுக்கு கொடுப்பதற்காக கேட்ட பணம் ரூபாய் 3.5 லட்சத்துடன் நாளை 09.05.2022ம் தேதி திங்கட்கிழமை அவரை அவரது அலுவலகத்தில் சந்திக்க உள்ளேன். ஆகவே, என்னிடம் ரூபாய் 3.5 இலட்சம் லஞ்சமாக கேட்ட உதவி கோட்ட பொறியாளர் சந்திரசேகரன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள, ஒப்பம் S.சுந்தரராஜ், 08.05.2022.*

Sir, Received the above computer typed complaint on 8.5.2022 at 18.30 hrs, the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I registered a case in Salem Vigilance and Anti Corruption Cr. No. 7/AC/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 21.00 hrs on 8.5.2022 and took up for investigation. Sd xxxx (S.MURUGAN) 8.5.2022, Inspector of Police, V & AC, Salem.

Original FIR along with original computer typed complaint of S.Sundararaj S/o.Somugounder is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

08/05/2022

(S.MURUGAN)
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.